## தி.மு.கழகத்தின் கடைசித் தொண்டன் உள்ளவரை

# தமிழையும் திராவிடத்தையும் யாராலும் எதுவும் செய்ய முடியாது!

## திண்டுக்கல் – ஆண்டி அம்பலம் இல்லத் திருமணவிழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறைகூவல்!

**திண்டுக்கல்,அக்.22-**

**திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகேயுள்ள விளாம்பட்டியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் - தலைமைக்கழகச் செயற்குழு உறுப்பினர் ஆண்டி அம்பலம் மகன் ஆண்டிச்சாமி - ராதாதேவி இணையரின் திருமணத்தை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று நடத்தி வைத்தார்.**

**அப்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், `இல்வாழ்வில் அடியெடுத்து வைக்கின்ற புதுமணத்தம்பதிகள் இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு, சுயமரியாதையோடும் பகுத்தறிவோடும் வாழ வேண்டுமென வாழ்த்திப் பேசினார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:**

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், கழகத்தின் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆண்டி அம்பலம் அவர்களின் இல்லத் திருமண விழாவில் பங்கேற்று தம்பி ஆண்டிச்சாமி, சகோதரி ராதாதேவி இணையர்களின் திருமண விழாவை நடத்தி வைப்பதில் மிகுந்த பெருமை அடைகிறேன். மகிழ்ச்சி அடைகிறேன்.

### இல்லத் திருமண விழா

எனக்கும் இந்த திண்டுக்கல் மாவட்டத்திற்கும் ஒரு சிறப்பான நெருங்கிய உறவு உண்டு. இந்த திண்டுக்கல் மாவட்டத்திற்கு பலமுறை வருகை தந்து இருக்கிறேன். கழகத்தின் சாதாரண உறுப்பினராக தேர்தல் பிரச்சாரத்திற்கு வருகை தந்து இருக்கிறேன். கழக நிகழ்ச்சிகளுக்கு வந்திருக்கிறேன், கழகத்தினரின் இல்லத் திருமண விழாக்களுக்கு வந்து இருக்கிறேன், அதன் பிறகு இளைஞர் அணிச் செயலாளராகப் பொறுப்பேற்று பலமுறை வந்து இருக்கிறேன். இளைஞர் அணி நிகழ்ச்சிகள், பிரச்சார நிகழ்ச்சிகள் என பலமுறை வந்து இருக்கிறேன்.

அண்ணன் சக்கரபாணி அவர்கள் குறிப்பிட்டதைப் போல சென்ற வருடம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் அமைச்சராக பொறுப்பேற்று பயணம் செய்து வந்த முதல் மாவட்டம் இந்த திண்டுக்கல் மாவட்டம். இப்படி பலமுறை வந்து இருக்கிறேன். இன்றைக்குத் துணை முதலமைச்சர் என்ற மிகப்பெரிய பொறுப்பை ஏற்ற பிறகு, முதன்முறையாக இந்த திண்டுக்கல் மாவட்டத்திற்கு வருகை தந்து உங்களையெல்லாம் சந்திப்பதில் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகின்றேன். பெருமை அடைகிறேன்.

குறிப்பாக, துணை முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, அதில் இன்னொரு கூடுதல் சிறப்பு என்னவென்றால், நான் நடத்தி வைக்கின்ற முதல் திருமணம் அண்ணன் ஆண்டி அம்பலம் அவர்களின் இல்லத் திருமணம்தான்.

### எனக்குத்தான் பெருமை

இங்கு பேசியவர்கள் குறிப்பிட்டுப் பேசினார்கள். அண்ணன் ஆண்டி அம்பலம் அவர்களுக்கு மிகப் பெரிய பெருமை. ஏனென்றால், துணை முதலமைச்சரே வந்திருக்கிறார் என்று சொன்னார்கள். அதில் ஒரு சிறிய திருத்தம். அண்ணன் ஆண்டி அம்பலம் அவர்களின் இல்லத் திருமண விழாவில் பங்கேற்பதில் எனக்குத்தான் பெருமை என்று கூறிக் கொள்கிறேன்.

ஏனென்றால் பாரம்பரியமிக்க அண்ணன் ஆண்டிஅம்பலம் அவர்களின் இல்லத் திருமண விழாவை நடத்தி வைக்கின்ற வாய்ப்பை அளித்து இருக்கிறார். அதற்கு அண்ணன் ஐ.பெரியசாமி அவர்களுக்கும், அண்ணன் சக்கரபாணி அவர்களுக்கும், அண்ணன் ஆண்டி அம்பலம் அவர்களுக்கும் மீண்டும், மீண்டும் நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### ஒரேயொரு கோரிக்கை

இந்த நேரத்தில் இரண்டு விஷயங்களுக்காக மீண்டும் நன்றி கூற விரும்புகிறேன். சென்ற மாதம் 28-ஆம் தேதி நம் கழகத் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் துணை முதலமைச்சர் பொறுப்பை என்னிடத்தில் அளித்தார். அளித்தவுடன் அடுத்த இரண்டு மூன்று நாட்களாக தமிழ்நாட்டில் இருக்கும் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் கழக நிர்வாகிகள் என்னைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவிப்பதற்காக என் இல்லத்திற்கு சென்னை நோக்கி படையெடுத்து வந்து கொண்டிருந்தார்கள். அவர்களிடத்தில் ஒரேயொரு கோரிக்கையை மட்டும் வைத்திருந்தேன். தயவு செய்து யாரும் சென்னைக்கு வராதீர்கள். நானே உங்கள் மாவட்டத்திற்கு வந்து, உங்களைச் சந்தித்து உங்களின் வாழ்த்துக்களைப் பெற்றுக் கொள்கிறேன். அதன்படி, இன்றைக்கு நான் இங்கே வந்துள்ளேன். நான் மணமக்களை மட்டும் வாழ்த்த வரவில்லை, உங்களிடத்தில் இருந்தும் வாழ்த்துகளைப் பெறுவதற்கும்தான் வந்திருக்கிறேன்.

### பத்தாயிரம் மடங்கு

இன்னும் சொல்லப்போனால் கடந்த மூன்று நாட்களாக திருண்ணாமலை, கள்ளக்குறிச்சி, விழுப்புரம், நேற்று முழுக்க சேலம். சேலத்தில் இருந்து நேற்று கிளம்பி, திண்டுக்கல் மாவட்ட எல்லைக்குள் நுழையும்போது நல்ல மழை. நள்ளிரவு பத்தரை மணி அளவில் சாலையின் இருபுறமும் நம் கழகத் தோழர்களும், இளைஞர் அணி நிர்வாகிகளும் நின்று என்னை வரவேற்று மகிழ்ந்தீர்கள். நீங்கள் எந்த அளவுக்கு மகிழ்ச்சியுடனும், சிரித்த முகத்துடனும், எழுச்சியுடனும் என்னை வரவேற்றீர்களோ அதைவிட, 100 மடங்கு அல்ல, ஆயிரம் மடங்கு அல்ல, பத்தாயிரம் மடங்கு உங்களையெல்லாம் பார்த்ததில் எனக்கு கூடுதல் மகிழ்ச்சி. உங்களின் வாழ்த்துகளைப் பெற்றதில் எனக்குக் கூடுதல் மகிழ்ச்சி.

இன்னொன்றுக்கும் நன்றி சொல்ல வேண்டும். கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது திண்டுக்கல் தொகுதிக்குத் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டேன். நம் கூட்டணிக் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த வேட்பாளர் அண்ணன் சச்சிதானந்தம் அவர்களுக்கு வாக்கு கேட்டு, உங்களை எல்லாம் சந்தித்தேன். மிகப்பெரிய வெற்றி. சுமார் நான்கரை லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் நீங்கள் கழகத் தலைவர் தலைமையிலான, தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற கூட்டணிக்கு வாக்களித்து, மிகப்பெரிய வெற்றியைக் கொடுத்தீர்கள். நீங்கள் மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களுமே 40க்கு 40 தொகுதிகள் என நூறு சதவிகித வெற்றியை, நம் இயக்கத்திற்கு திராவிட மாடல் அரசிற்கு கொடுத்தார்கள். எனவே, வாக்காளப் பெருமக்களுக்கும் மிகப்பெரிய வெற்றியைக் கொடுத்ததற்கு இந்த நேரத்தில் நன்றி தெரிவிக்கின்றேன்.



இங்கு நம் கழகத்தின் துணை பொதுச் செயலாளர் அண்ணன் ஐ.பெரியசாமி அவர்கள் இருக்கிறார். அவர் ஆறு முறை சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றவர். இன்று அமைச்சராக அமர்ந்திருக்கிறார். அதேபோல் இங்கு அமைச்சர் அண்ணன் சக்கரபாணி அவர்களும் இருக்கிறார். அவரும் ஆறு முறை சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று இன்று அமைச்சராக அமர்ந்திருக்கிறார். அதேபோல் எங்களுக்கு இன்னொரு பெருமை எங்களின் இளைஞர் அணியிலிருந்து தனது கடின உழைப்பால், இளைஞர் அணி பணியால் இன்றைக்கு மாவட்டக் கழகச் செயலாளராக உயர்ந்துள்ள சகோதரர் ஐ.பி.செந்தில்குமார் அவர்கள் இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக அமர்ந்திருக்கிறார்.

### `அண்ணன் செந்தில்குமார்'

அவரும் பேசும்போது சொன்னார். மற்றவர்கள் எல்லாம் அழைக்கும் பொழுது `சின்னவர்' என்று அழைப்பார்கள். அவரும் என்னை `சின்னவர்' என்று அழைத்து விட்டார். உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் அவர் என்னைவிட வயதில் சின்னவர். ஆனால், அவர் சின்னவர் என்று கூப்பிடும்போது, மனதில் ஒரு சின்ன சந்தோஷம். ஏனென்றால், என் வயது அவரை விட குறைவாக உங்களுக்கு தெரியும். அதனால், அவர் என்னை சின்னவர் என்று கூப்பிட்டு விட்டதால் இனிமேல் அவரை `அண்ணன் செந்தில்குமார்' என்றே கூப்பிடலாம். செந்தில்குமார் அவர்களுக்கும் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதையெல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால், அந்த அளவிற்கு கழகத்தின் கோட்டையாக இன்றைக்கு திண்டுக்கல் மாவட்டம் திகழ்ந்து கொண்டிருக்கிறது. அண்ணன் ஆண்டி அம்பலம் அவர்களைப் பொறுத்தவரை, வழி வழியாக மக்களுக்காக உழைக்கின்ற, தொண்டு செய்கின்ற ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர். அண்ணன் அவர்களின் தந்தை பெரியவர் ஆண்டி அம்பலம் அவர்கள் ஏழு முறை சட்டமன்ற உறுப்பினராக வெற்றிபெற்று மக்களுக்காக தொடர் பணியாற்றியவர்.

அண்ணன் ஆண்டி அம்பலம் அவர்களும் சட்டமன்ற உறுப்பினராக மிகச் சிறப்பாகச் செயல்பட்டவர். ஆனால், சென்ற தேர்தலில் மிகக் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் வெற்றிவாய்ப்பை இழந்தாலும், இந்தப் பகுதி மக்களுக்கு எல்லாமுமாக அவர்தான் இப்பொழுதும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். இந்த திண்டுக்கல் மாவட்டம், எப்பொழுதுமே மற்ற மாவட்டங்களுக்கு எடுத்துக்காட்டு மாவட்டமாக, முன்மாதிரி மாவட்டமாக செயல்படுவதுதான் வழக்கம்.

அந்த வகையில், இந்தத் திருமணம் கழகக் குடும்பங்களுக்கே உரிய வகையில், ஒரு சிறப்பான சுயமரியாதைத் திருமணமாக உங்கள் முன்னிலையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இங்கு நிறைய தாய்மார்கள், பெண்கள், மகளிர் வந்திருக்கிறீர்கள். ஒரு காலத்தில் வீட்டை விட்டு வெளியே வருவதற்கு உரிமை கிடையாது.

### தந்தை பெரியார் குரல்

இன்னும் சொல்லப் போனால், பள்ளிக்கூடத்திற்குச் சென்று படிப்பதற்கு உரிமை கிடையாது. ஆனால், இன்றைக்கு இந்தக் கூட்டத்தில்கூட பார்த்தீர்கள் என்றால், பெண்கள் ஆண்களுக்குச் சமமாக, இன்னும் சொல்லப்போனால் ஆண்களைவிட அதிகமான அளவில் பெண்கள் வந்து இந்த மணமக்களை வாழ்த்தி இருக்கிறீர்கள். பெண்கள் படிக்கக் கூடாது என்று சொன்னார்கள். வீட்டை விட்டு வெளியே வரக்கூடாது என்று சொன்னார்கள். கணவன் இறந்தால் மனைவியும் உடனே இறந்து போக வேண்டும் என்று சொன்னார்கள். இதையெல்லாம் எதிர்த்துத்தான் தந்தை பெரியார் அவர்கள் குரல் கொடுத்தார்கள்.

தந்தை பெரியார் கொடுத்த குரலைத்தான், பேரறிஞர் அண்ணா கொடுத்த குரலைத்தான், நம் தலைவர் கலைஞர் கொடுத்த குரலைத்தான் நானும் சொன்னேன். இதைத்தான் நான் சொல்லாததைச் சொன்னதாகப் பொய்யாக திரித்து, தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்தியாவில் உள்ள பல நீதிமன்றங்களில் இப்போது என் மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது.

என்னை நீதிமன்றத்தில் மன்னிப்பு கேட்க சொன்னார்கள். நான் சொன்னேன். நான் சொன்னால், சொன்னதுதான். கலைஞர் பேரன் எதற்கும் மன்னிப்பு கேட்கமாட்டேன் என்று நீதிமன்றத்தில் அந்த வழக்கைச் சந்தித்துக் கொண்டிருக்கிறேன்.

தந்தை பெரியாரின் லட்சியங்களுக்கு, பேரறிஞர் அண்ணாவும் முத்தமிழறிஞர் கலைஞரும் செயல்படுவோம் கொடுத்தார்கள். சுயமரியாதைத் திருமணங்களுக்கு அண்ணா அவர்கள் சட்ட வடிவம் கொடுத்தார்கள். இன்னும் சொல்லப்போனால், மகளிருக்குக் குடும்பச் சொத்தில் சம உரிமை இருக்கிறது என்று இந்தியாவிலேயே முதன்முறையாக 30 வருடத்திற்கு முன்பு சட்டம் போட்டவர் நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் இன்றைக்கு நம் முதலமைச்சர் அவர்களும் மகளிரின் முன்னேற்றத்திற்கு பல்வேறு திட்டங்களை, ஒவ்வொரு நாளும் செயல்படுத்திக் கொண்டு வருகிறார். அதில் ஒரு சில திட்டங்களை மட்டும், இங்கு உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

### மகளிருக்கு விடியல் பயணம்

> **“நாடாளுமன்றத் தேர்தல் நமக்கு ஒரு அரை இறுதிப் போட்டி மாதிரி. அதில் மிகப்பெரிய ஒரு வெற்றியை அடைந்து விட்டோம். வர இருக்கின்ற சட்டமன்றத் தேர்தல் இறுதிப் போட்டி. அரை இறுதிப் போட்டியில் வென்று விட்டோம் 40க்கு 40 வெற்றி பெற்று விட்டோம். இப்போது இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றாக வேண்டும். 234 தொகுதிகளில் குறைந்தது 200 தொகுதிகள் வெற்றிபெற வேண்டும் என்று சொன்னார்.”**

நம் முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்று, முதல் கையெழுத்து எதற்கு போட்டார் என்று உங்களுக்குத் தெரியும். பெண்களுக்குப் பேருந்துகளில் கட்டணமில்லாப் பேருந்து வசதித் திட்டம். மகளிருக்கு விடியல் பயணத்திற்கான திட்டம். அந்தத் திட்டத்தின் வாயிலாக இந்த மூன்று வருடத்தில் இதுவரைக்கும் மகளிர் 530 கோடி முறை பயணம் செய்திருக்கிறார்கள். இது எவ்வளவு பெரிய சாதனை தெரியுமா? இந்தத் திட்டத்தை இப்பொழுது பல்வேறு மாநிலங்கள் இதை எப்படிப் பயன்படுத்தினார்கள் என்று மற்ற மாநிலங்களும் இதைச் செயல்படுத்த முனைப்புக் காட்டி கொண்டிருக்கிறார்கள். இதற்கு பெயர்தான் திராவிட மாடல் அரசு. மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கக்கூடியதுதான், நம் திராவிட மாடல் அரசு, நம் முதலமைச்சர் அவர்கள்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். காலையில் எழுந்து குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்கு சீக்கிரம் அனுப்ப வேண்டும். வேலைக்குச் செல்கின்ற பெற்றோர்கள் சமைப்பதற்கு நேரம் இருக்காது. பசியோடு அனுப்பி வைத்து விடுவார்கள். ஆனால், நம் முதலமைச்சர் அவர்கள் குழந்தைகள் பசியோடு பள்ளிக்கூடத்திற்குச் சென்று படிக்கக் கூடாது. முதலில் பள்ளிக்குச் சென்று சாப்பிட்டுவிட்டுப் படிக்க வேண்டும் என்று ஆரம்பிக்கப்பட்ட திட்டம்தான் இந்தியாவிலேயே முதன்முறையாக ஆரம்பிக்கப்பட்ட திட்டம்தான் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்.

இந்தத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு நாளும் திங்கள் முதல் வெள்ளி வரை ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கின்ற குழந்தைகள் அனைவருக்கும் கிட்டத்தட்ட 20 லட்சம் குழந்தைகள் இந்தத் திட்டத்தின் மூலம் பயன் பெற்றுக் கொண்டு வருகிறார்கள்.

### கல்வி ஊக்கத்தொகை

பெண்கள் படிக்க வேண்டும். வீட்டை விட்டு வெளியே வரவேண்டும். பள்ளிக்கூடம் போனால் மட்டும் பத்தாது. உயர்கல்வி படிக்க வேண்டும் என்று, அரசு பள்ளியில் படித்து எந்தக் கல்லூரியில் சென்று படித்தாலும், தனியார் கல்லூரியில் சென்று படித்தாலும் அவர்களுக்கு மாதந்தோறும் கல்வி ஊக்கத் தொகையாக புதுமைப்பெண் என்ற திட்டத்தின் மூலம் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்குகிறார், நம் முதலமைச்சர் அவர்கள், நம் திராவிட மாடல் அரசு.

இப்பொழுது மாணவிகள் அதிகமாக படிக்க ஆரம்பித்து விட்டார்கள். மாணவர்களைவிட மாணவிகள் அதிகமாக படிக்க ஆரம்பித்துவிட்டார்கள். உடனே தலைவர் அவர்கள் புதுமைப் பெண் திட்டம் மாதிரி மாணவர்களுக்கும் ஒரு திட்டம். அந்தத் திட்டத்தின் பெயர் தமிழ்ப்புதல்வன் திட்டம். அரசுப் பள்ளியில் படித்து கல்லூரிகளுக்குச் சென்று படித்தால், மாணவர்களுக்கும் கல்வி ஊக்கத்தொகை மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது.

இதற்கெல்லாம் மேலாக முத்தாய்ப்பாக ஒரு மிக மிக முக்கியமான திட்டம். தேர்தல் அறிக்கையில் நம் தலைவர் அவர்கள் அறிவித்த திட்டம். எதிர்க்கட்சிகள் இந்தத் திட்டத்தை நடத்தவே முடியாது, வாய்ப்பே கிடையாது என்று சொன்ன திட்டம். அதுதான் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம். அந்தத் திட்டத்தையும் கடும் நிதிநெருக்கடிகளுக்கு மத்தியில் நம் தலைவர் அவர்கள் செப்டம்பர் 15-ஆம் தேதி பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளில் அறிவித்து, அதை செயல்படுத்தினார்.

இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரைக்கும் ஒவ்வொரு மாதமும் கடந்த ஆண்டு செப்டம்பர் 15-ம் தேதி முதல் இன்று வரை 1 கோடியே 16 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம் கொடுக்கப்பட்டு வருகிறது. விடுபட்ட சிலருக்கும் கலைஞர் உரிமைத் தொகைத் திட்டத்தின் கீழ், நிச்சயம் உரிமைத் தொகையை வழங்க, நம் முதலமைச்சர் அவர்கள் கண்டிப்பாக நடவடிக்கை எடுத்து அதையும் கொடுப்பார் என்ற உறுதிமொழியை இப்போது கொடுக்கிறேன்.

### ஏராளமான திட்டங்கள்

இப்படி மகளிரின் பொருளாதார சுதந்திரத்தை உறுதி செய்யும் வகையில், ஏராளமான திட்டங்களை, நம் திராவிட மாடல் அரசு செயல்படுத்திக் கொண்டு வருகிறது. இந்தத் திண்டுக்கல் மாவட்டத்தின் மீது நம் முதலமைச்சர் அவர்களுக்கு எப்பொழுதுமே ஒரு தனிப் பாசம், தனி அக்கறை உண்டு. இந்தப் பகுதியில் கழக ஆட்சி அமைந்த பிறகு, 3,000 கோடி ரூபாய் செலவில் கூட்டுக்குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பழனியில் உள்ள அரசு மருத்துவமனை 100 கோடி ரூபாய் செலவில் மாவட்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. விளையாட்டு மேம்பாட்டு துறையின் சார்பாக ஆத்தூர், ஒட்டன்சத்திரம் தொகுதிகளுக்கு தலா மூன்று கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு மினி ஸ்டேடியங்கள் விரைவில் வர உள்ளன. இன்னும் பல திட்டங்கள் இந்த திண்டுக்கல் மாவட்டத்திற்கு வர இருக்கின்றன.

மணமக்களுக்கு ஒரேயொரு செய்தி. உங்களின் திருமணம் மட்டுமல்ல, உங்களின் வாழ்க்கையும் சுயமரியாதைமிக்க வாழ்க்கையாக அமைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மணமக்கள் இருவரும் நன்கு படித்தவர்கள். நாம் அதிகமாக அவர்களுக்கு அறிவுரை சொல்லத் தேவையில்லை. எனவே ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு வாழ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் ஒருவரை ஒருவர் சுயமரியாதையோடு நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு வேண்டுகோள், உங்களுக்குப் பிறக்கின்ற குழந்தைகளுக்கு ஆண் பிள்ளையாக இருந்தாலும் சரி, பெண் குழந்தையாக இருந்தாலும் சரி அழகான ஒரு தமிழ்ப் பெயரைச் சூட்ட வேண்டும் என்றும், உங்கள் சார்பாக மணமக்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இன்றைக்குப் பல பேர் எப்படியாவது தமிழ்நாட்டிற்குள் இந்தியைத் திணித்து விடலாம் என்று பல்வேறு வழிகளில் முயற்சிக்கிறார்கள்.

நேரடியாக முடியவில்லை. அதனால்தான் தமிழ்த்தாய் வாழ்த்திலிருந்து சில வார்த்தைகளை நீக்குகிறார்கள். புதிய கல்விக் கொள்கை என்று சொல்லி, இந்தித் திணிப்பை தமிழ்நாட்டிற்குள் கொண்டு வர முயற்சிக்கிறார்கள். இதற்கு பல பேர் துணை போக முயன்றார்கள். ஆனால், நம் முதலமைச்சர் அவர்கள் செய்த செயலில், அனைவரும் இன்று மண்ணைக் கவ்விக்கொண்டு இருக்கிறார்கள்.

### மக்கள் எதிர்ப்பு

ஏற்கனவே ஒருவர் முயற்சி செய்தார். நம் மாநிலத்திற்கு `தமிழ்நாடு' என்று பெயர் சூட்டியவர் பேரறிஞர் அண்ணா. தமிழநாடு என்ற பெயரை மாற்ற வேண்டும் என்று ஒருவர் முயற்சித்தார். ஆனால், தமிழ்நாடு முழுக்க மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததால், மன்னிப்பு கேட்டார். இப்போது `தமிழ்த்தாய் வாழ்த்தில் திராவிடத்தை நீக்கு' என்று சிலர் கிளம்பி இருக்கிறார்கள். தி.மு.க-வின் கடைசித் தொண்டன் உள்ளவரை, கடைசித் தமிழன் இருக்கும்வரை இங்கு தமிழையும், தமிழ்நாட்டையும், திராவிடத்தையும் யாராலும் எதுவும் தொட்டுக்கூட பார்க்க முடியாது. எதுவும் செய்ய முடியாது என்பதை இந்த திருமண விழாவில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தித் திணிப்பை தமிழ்நாடு ஒருபோதும் ஏற்காது. அதை நம் தலைவர் அவர்களும் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார் என்று கூறிக்கொண்டு இந்த திருமண விழாவில், நாம் அனைவரும் ஒரு சபதம் ஏற்போம். தலைவர் அவர்கள் சொல்லி இருக்கிறார். வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் சென்ற நாடாளுமன்றத் தேர்தல் நமக்கு ஒரு அரை இறுதிப் போட்டி மாதிரி. அதில் மிகப்பெரிய ஒரு வெற்றியை அடைந்து விட்டோம். வர இருக்கின்ற சட்டமன்றத் தேர்தல் இறுதிப் போட்டி. அரை இறுதிப் போட்டியில் வென்று விட்டோம் 40க்கு 40 வெற்றி பெற்று விட்டோம்.

இப்போது இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றாக வேண்டும். 234 தொகுதிகளில் குறைந்தது 200 தொகுதிகள் வெற்றிபெற வேண்டும் என்று சொன்னார். அதற்கான முயற்சியில் நாம் ஈடுபட வேண்டும் என்று சொன்னார். நான் சொல்கிறேன், 200-க்கும் மேற்பட்ட தொகுதிகளில் நம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அணி, தலைமையிலான கூட்டணி நிச்சயம் வெற்றி பெற வேண்டும். அதற்கு நாம் எல்லாம் தயார்படுத்திக் கொள்வோம். அதற்கான பணிகளில் ஈடுபடுவோம் என்று கேட்டுக் கொண்டு, இன்றைக்கு இவ்விழாவில் இணையும் மணமக்கள் இருவரும் பெரியாரும் பகுத்தறிவும் போல, அண்ணாவும் தமிழ்நாடும் போல, கலைஞரும் தமிழும் போல, கழகத் தலைவரும் உழைப்பும் போல பல்லாண்டு வாழ்க வாழ்க என வாழ்த்தி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, அர. சக்கரபாணி, பி.மூர்த்தி, திண்டுக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர் ஐ.பி.செந்தில் குமார், மதுரை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மணிமாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் காந்திராஜன், வெங்கடேசன், நாடாளுமன்ற உறுப்பினர் சச்சிதானந்தம், மாநகரச் செயலாளர் ராஜப்பா, மாநகர மேயர் இளமதி, முன்னாள் மாவட்டச் செயலாளர் ஜெயராமகிருஷ்ணன், ஜெயக்குமார், இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர்கள் இன்பா இரகு, ஜி.பி.ராஜா, ஆனந்த்குமார், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வேலுச்சாமி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் இரத்தினகுமார், பழனிச்சாமி, தர்மராஜ், மோகன், வெள்ளிமலை, பேரூர் கழகச் செயலாளர் ராஜ்மோகன், ஒன்றிய பெருந்தலைவர் பழனியம்மாள், பேரூராட்சித் தலைவர் ஷேக் சிக்கந்தர் பாட்ஷா, பொதுக்குழு உறுப்பினர் முத்துக்குமாரசாமி, மாவட்ட பொருளாளர் நத்தம் விஜயன், மாவட்டத் துணைச் செயலாளர் ராஜாமணி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் கணேசன், ஹரிஹரசுதன் உள்பட உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் ஏராளமான கழக முன்னணியினர் கலந்துகொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.10.2024) திண்டுக்கல் மாவட்டம், நத்தம் விளாம்பட்டி விலக்கில் நடைபெற்ற முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நத்தம் எம்.ஏ.ஆண்டிஅம்பலம் அவர்களின் மகன் ஆண்டிச்சாமி - செல்வி ராதாதேவி ஆகியோரின் திருமணத்தை நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில், கழகத் துணை பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சருமான இ.பெரியசாமி. திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளரும், உணவுத்துறை அமைச்சருமான அர.சக்கரபாணி, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, கிழக்கு மாவட்ட செயலாளரும் பழனி சட்டமன்ற உறுப்பினருமான இ.பெ.செந்தில்குமார், திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சச்சிதானந்தம், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ச.காந்திராஜன் உட்பட கழக நிர்வாகிகள், இளைஞரணியினர் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.